தமிழ் நாடு சட்டப் பேரவை

புதன்கிழமை, 1971 டிசம்பர் 15.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. கே. ஏ. மதியழகன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்---விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

அரசுப் பதவிகளில் அரிசனங்களுக்கு ஒதுக்கீடு

* 394 வினா—திரு. எம். முத்தையா: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசாங்கப் பதவிகளில் ஆட்கள் தேர்ந்தெடுக்கும் போது, தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள ஸ்தானங்கள் குறிப்பிட்ட ஆண்டில் பூர்த்தியாகாத இடங்களை ஒதுக்கி வைத்து மறு தேர்வில் தகுதியுடைய தாழ்த்தப்பட்ட இனத்தவர்களுக்குக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுப் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) & (இ) அரிசனங்கள், பழங்குடி மக்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் ஓராண்டில் நிறைவு செய்யப்படாமல் எஞ்சி நின்ற இடங்களை அடுத்த ஈராண்டுகள் வரை ஒதுக்கியவாறு கணக்கில் எடுத்தெழுதி வைத்திருக்க வேண்டுமென்றும் சாதாரணமாக ஓராண்டில் ஒதுக்கப்படும் காலி இடங்களின் எண்ணிக்கையும் மேற்சொன்ன கணக்கில் எடுத்தெழுதி வைத்துப் பார்க்கும்போது மொத்தம் ஏற்படும் காலி இடங்களில் 45 சதவீதத்திற்கு மேல் ஆகக் கூடாதென்னும் உத்தரவை அரசு பிறப்பித்திருந்தது.

இதனையடுத்து, பின்தங்கிய வகுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கையை 25 சதவீதத்திலிருந்து 31 சதவீதமாகவும், அரிசனங்கள், பழங்குடி மக்கள் இவர்களுக்காக ஒதுக்கப்பட்ட இடங்களின் எண்ணிக்கை 16 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாகவும் உயர்த்தி, அரசு உத்திரவு பிறப்பித்துள்ளது. மேற்சொன்ன உத்திரவுகளையொட்டி ஓராண்டில் எஞ்சிநிற்கும் காலி இடங்களை அடுத்த ஆண்டுக் கணக்கில் எடுத்தெழுதிக் கொள்ள வேண்டுமென்று பிறப்பித்திருந்த உத்திரவுகள் பயனற்றவை ஆயின.

திரு. கே. டி. கே. தங்கமணி: தலைவர் அவர்களே, பொதுவாகவே அரிசனங்களுக்கு ஒதுக்கப்பட்டிருக்கக்கூடிய 18 சதவீத இடங்களும் பூர்த்தி ஆகாத நிலையில்தான் இருக்கிறது. இந்த உத்தரவு முறையாக அமுல்படுத்தப் படுவதற்காக அரசு சுற்றறிக்கை ஏதாவது அனுப்புமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அப்படிக் குறைவான அளவில் இருப்பதாகத் தெரியவில்லை. இது சரியாக அமுல்படுத்தப் படுவதற்கு அரசு ஏற்கெனவே சுற்றறிக்கை அனுப்பியிருக்கிறது. இன்னும் குறைபாடுகள் இருக்குமானால் கவனிக்கப்படும்.

காவல் துறை அலுவலர்கள் மாநாடு

** 395 வின—*திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 13-9-1971 அன்று தமிழ்நாடு மாவட்ட போலிஸ் அதிகாரிகள் மாநாடு சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்றதா?

(இ) ஆம் எனில், அதில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

(இ) கீழ்க்காணும் பொருள்கள் குறித்து முடிவுகள் எடுக்கப்பட்டு அவை ஆய்விலிருந்து வருகின்றன :—

1. மதுவிலக்குச் சட்டத்தை ஒத்திவைத்து ஆப்காரி சட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருவது தொடர்பாக காவலர்களுக்குள்ள சிக்கல்கள்.

2. நாட்டு வெடி மருந்து வைத்துப் பாறைகளை உடைப்பதத் தடை செய்வது.

3. மருத்துவ மனைகளில் குற்றவாளி சிகிச்சைப் பிரிவுகள் கட்டுவது.

4. நகரங்களிலும், பட்டணங்களிலும் சாலைகள். தெருக்கள் இவற்றிலுள்ள ஆக்கிரமிப்புகளை நீக்குவதற்கான சிறப்பு நடவடிக்கைகள்.

5. மாநில எல்லைச் சோதனை நிலையங்கள் வெவ்வேறு துறைகள் வெவ்வேறு சோதனை நிலையங்களை வைத்து வருவது-பொதுச் சோதனை நிலையம் ஏற்படுத்துவது.

6. காவலர் செய்தித் தொடர்பகளையும் போக்குவாத்து வசதிகளையும் காலத்திற்கேற்ப மாற்றியமைத்தில்.

7. துப்பறியும் முறைகளை காலத்திற்கேற்ப மாற்றியமைத்தல்.

8. காவல்துறை சார்நிலைப் பணியாளர்களில் 80 சதவிதத்தினருக்குக் குடியிருப்பு வசதியளிப்பது என்னும் குறிக்கோள் அளவை எய்துவதற்காகக் காவலர் வீட்டு வசதித் திட்டத்தை விரிவு படுத்துதலும், இத் திட்டத்தை அரசிதழ் பதிவு பெற்ற காவல் அதிகாரிகளுக்கு, குறிப்பாக உட்கோட்ட அதிகாரிகளுக்கு நீட்டித்தலும்.